*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

**ISSN: 2456 - 4613**
**Volume IX (1)**
**December - 2024**

# சீவக சிந்தாமணியில் வேளாண் மேலாண்மை

நாகஜோதி செ,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர்.

**Corresponding Author's mail ID:** nagajyothi@vvvcollege.org

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கிய வகைகளில் காப்பியங்கள் தனித்துவம் மிக்கது, பெருமையானது. தொடர்நிலைச் செய்யுள் என்ற தன்மையைச் சார்ந்த காப்பியங்கள் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்பதாகத் தோற்றம் பெற்று வளர்ந்தது. பெருங்காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணியில் பல்வேறு இனத்தார், பல்வேறு கலைகள், பல்வேறு தொழில் நுட்பங்கள் பற்றிக் காண முடிகிறது. அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நான்கு வகை வர்ணத்தார்களில் வேளாளர்களின் வேளாண் மரபுகளை அறியும் விதமாக இவ்வாய்வு அமைகிறது.

**குறிப்புச்சொற்கள்- வேளாண்மைச் சிந்தனைகள்–வேளாண்மை நுட்பங்கள் – வேளாண்மையில் எருதுகளின் தேவை–வேளாளர்களின் பெருமைகள் - வேளாளர்களின் தொழில் நுட்பங்களள.**

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் பெருங்காப்பியம் அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற உறுதிப்பொருள்களால் பாடப்படும் என்கிறது தண்டியலங்காரம். ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணி சமண சமயக்காப்பியம் ஆகும். திருத்தக்கதேவரால் எழுதப்பட்ட இக்காப்பியம் சீவகனின் வாழ்க்கை வரலாற்றை எடுத்தியம்புகிறது. அவ்விதத்தில் சீவகனின் நாடாகிய ஏமாங்கத நாட்டின் வளத்தை திருத்தக்கதேவர் மிக அற்புதமாக வெளிப்படுத்தியுள்ளார். ஏமாங்கத நாடு வளமான பெருநாடு ஆகும். அந்நாட்டில் வாழ்ந்த வேளாளர்கள் உலக உயிர்களைக் காக்கும் உன்னதப் பணியைச் செய்தனர். இவ்வேளாளர்கள் தம் நிலத்தை நன்கு உழுது, விதைகளை விதைத்து, பயிர்களை நன்கு வளர்த்து, நெற்கதிர்களை உருவாக்குவதற்கான மரபு முறைகளை அறிந்து செயல்படுத்தினர். இத்தகைய ஏமாங்கத நாட்டு மக்களின் வேளாண்மை மரபுகளின் பெருமைகளை வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சீவக சிந்தாமணி அமைப்பும் சிறப்பும்

இராசமாபுரத்தைத் தலைநகராகக் கொண்ட ஏமாங்கத நாட்டின் மன்னன் சச்சந்தன். அவனது மனைவி விசயை ஆவாள். அமைச்சன் கட்டியங்காரனின் சூழ்ச்சியால் சச்சந்தன் கொல்லப்பட்டான். விசயைத் தம் மகனை இடுகாட்டில் பெற்றுச் சீவு என்றழைத்தமையால் சீவகன் என அழைக்கப்பட்டான். இச்சீவகன் கந்துக்கடன் என்ற வணிகனால் வளர்க்கப்பட்டான். இவன் பல்வேறு கலைகளைக் கற்று, வீரத்தில் சிறந்து, எட்டுப் பெண்டிரை மணந்து, கட்டியங்காரனிடமிருந்து தம் நாட்டை மீட்டு, இறுதியில் துறவியானான் என்பதே இக்காப்பியத்தின் கதைக்கருவாகும். பதின்மூன்று இலம்பகங்கள் கொண்ட இக்காப்பியத்தில் முதன்மையாக அமைந்தது நாமகள் இலம்பகமாகும். இந்த இலம்பகத்தில் ஏமாங்கத நாட்டின் வளத்தை,

**"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்**
**பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை**
**போழ்ந்து தேமாங் கனிசி தறிவாழைப் பழங்கள்**
**சிந்தும்**
**ஏமாங் கதமென் றிசையாற்றிசை போய துண்டே"1**

என்று மிக அற்புதமாகத் திருத்தக்கதேவர் வெளிப்படுத்தியுள்ளார்.

## உழவுப்பணி மரபு

சங்ககாலம் முதல் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைப் பாகுபாடுகள் சமூகத்தில் இருந்தமையைத் தொல்காப்பியம் பறைசாற்றியுள்ளது. இப்பிரிவினர்களில் நிலத்தினை உழுது பயிர் விளைவிப்பதைக் கடமையாகக் கொண்டவர்கள் வேளாளர்கள் எனப்பட்டனர். இவ்வேளாளர்களுக்கு முதன்மையானது நிலமும் பொழுதும் ஆகும் என்பதைத் தொல்காப்பியம்,

**"முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்**
**இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே"2**

என்கிறது. வேளாளர்கள் தம் நிலத்தில் விதைகளை விதைக்கத் தொடங்குவதற்கு முன் உழவுப்பணியை மேற்கொள்வர். தொல்காப்பியம் இவ்வுழவுப்பணி பற்றி,

**"வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது**
**இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"3**

என்கிறது. இதன் மூலம் பழந்தமிழர் நிலத்தை உழுது செம்மைப்படுத்தினர் என அறியமுடிகிறது. ஏமாங்கத நாட்டு உழவர்கள் தம் நிலத்தை உழுவதற்கு எருதுகளை பயன்படுத்தினர். அவ்வெருதுகளை ஏரிற் பூட்டி கழனியில் உழுவதற்குச் செல்லக்கூடிய உழவர்கள் 'வெள்ளம்' (இச்சொல்லுக்கு கம்பர் கிட்கிந்தாக்காண்டம் –நாடவிட்ட படலத்தில் எட்டுச் சமுத்திரம் அளவு என்கிறார்) என்ற எண்ணிக்கையளவு இருந்தனர் என்பதைச் சீவக சிந்தாமணி,

**"நெறிமருப் பெருமையி னொத்த னீளினஞ்**
**செறிமருப் பேற்றினஞ் சிலம்பப் பண்ணுறீஇப்**
**பொறிவரி வராலின மிரியப் புக்குடன்**
**வெறிகமழ் கழனியுள் ளுழுநர் வெள்ளமே"4**

என்கிறது. இத்தகைய எருதுகளுக்குப் பூக்கள் மற்றும் அரிசிப்புல்லைத் தின்னச் செய்து உழவுக்கு முன்பே உழவர்கள் வலிமைப்படுத்துவர் என்பதை,

**"பூமனு மரிசிப்புல் லார்ந்த மோட்டின**
**தாமின மமைந்துதந் தொழிலின் மிக்கவே"5**

என்கிறார் திருத்தக்கதேவர். இதன் மூலம் ஏமாங்கத நாட்டு வேளாளர்களின்

உழவுப்பணி மரபினை அறியமுடிகிறது. இன்றைய சூழலில் வேளாளர்கள் தம் நிலத்தை உழுவதற்கு இயந்திரத்தைப் பயன்படுத்துகின்றனர். அவர்தம் வாழ்க்கையும் இயந்திரம் போல் இருக்கிறது. மேலும் ஆடிப்பாடி வேலை செய்து மகிழ்ந்த நிலையைக் காண இயலவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**நிலமகளைத் தொழுது விதைத்தல்**

ஏமாங்கத நாட்டு வேளாளர்கள் தம் நிலத்தை நன்கு உழுத பிறகு விதைப்பதற்கு முன் நிலமகளைத் தொழுது விதை விதைப்பர். அவ்விதை நன்கு முளைத்து நாற்றுக்களானவுடன் காலதாமதப்படுத்தாமல் அந்நாற்றுக்களைப் பறித்து வயலில் நடுவதற்கு உழத்தியரைத் திரள் திரளாக அழைத்துச் செல்வர் என்பதை,

**“சேறமை செருவினுட் செந்நெல் வான்முளை**
**வீறொடு விளைகெனத் தொழுது வித்துவார்**
**நாறிது பதமெனப் பறித்து நாட்செய்வர்**
**கூறிய கடைசியர் குழாங்கொண் டேகுவார்”6**

என்கிறது சீவக சிந்தாமணி. இதன் மூலம் நெற்பயிர்களை உருவாக்கும் எண்ணமே அவர்களது உயிர்மூச்சாக இருந்துள்ளது என உணர முடிகிறது. இன்றைய நவீன வளர்ச்சியால் விவசாயிகளில் பெரும்பாலானவர்கள் விதைகளை விதைப்பதற்கும், நாற்றுக்களை நடுவதற்கும் இயந்திரங்களைப் பயன்படுத்துகின்றனர். பொருளாதாரத்தை முதன்மையாகக் கருதும் இன்றைய வேளாளர்களின் வாழ்க்கையில் மனமகிழ்ச்சியில்லை என்பது நிதர்சனமானதாகும்.

**நாற்று நடும் பணி**

ஏமாங்கத நாட்டு உழவர்கள் நாற்றுக்களை வயலில் நடுவதற்கான பணியைச் சிறப்புடன் நிறைவேற்ற உழத்தியரை அழைத்துச் செல்வர். நாற்றின் கட்டுகளை உழத்தியர் மிக உற்சாகத்துடனும், ஆரவாரத்துடனும் நட்டனர். அவர்களின் ஆரவாரத்தை அங்கிருந்த மயில்கள் கார்காலத்து முகிலின் முழக்கவொலி என நினைத்ததாகத் திருத்தக்கதேவர்,

**“வளைமுடி நடுபவர் வரம்பில் கம்பலை**
**இளமழை முழக்கென மஞ்ஞை யேங்கலி”7**

என்கிறார். இதன் மூலம் உழத்தியர் நாற்றுகளை நடும் பணியை விருப்பத்துடன் செய்தனர் என அறிய முடிகிறது. இன்றைய பெண்டிர் பொருளாதாரத் தேவை கருதி வேளாண்மைப் பணியைச் செய்கின்றனர். எனவே அவர்களது வேலையில் மகிழ்ச்சி, உற்சாகம் என்பதைக் காண முடிவதில்லை என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கதாகும்.

**களை பறித்தல்**

ஏமாங்கத நாடு மிக்க வளத்தோடு காட்சி தந்தது, ஏனெனில் நாற்றுக்கள் நன்கு வளர்ந்திருந்தன. அத்துடன் களையும் சேர்ந்து வளர்ந்தது, அக்களைகள் பறிக்கப்பட்டால் தான் நெல் நன்கு பயிராகும். எனவே களைகளைப் பறித்தனர் என்பதைச் சீவக சிந்தாமணி,

**“கண்ணெனக் குவளையும் கட்ட லோம்பினார்**
**வண்ணவான் முகமென மரையி னுட்புகார்**
**பண்ணெழுத் தியல்படப் பரப்பி யிட்டனர்**
**தண்வய லுழவர்தந் தன்மை யின்னதே”8**

என்கிறது. உழவர்கள் பாடல் பாடிக்கொண்டே களை பறித்தனர் என்பதை உணர முடிகிறது. இன்றைய ஆண்களும், பெண்களும் நவீன இயந்திரமான கைபேசி மூலம் இனிமையான பாடல் கேட்டுக்கொண்டே பணி செய்கின்றனர் என்பது நினைத்துப் பார்க்கத்தக்கதாகும்.

**நெற்பயிர் விளைந்த முதிர்ச்சி**

உழவர்கள் தம் நிலத்தில் நட்ட நாற்றுக்கள் நன்கு வளர்வதற்கேற்ப களைகளைப் பறித்தெடுத்த பிறகு சிற்சில நாட்களில் நெற்பயிர் நன்கு வளர்ந்து மிக அற்புதமாகக் காட்சி தந்தது, இதனைத் திருத்தக்கதேவர்,

**"சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்**
**மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்**
**செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்**
**கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே"9**

என்கிறார். இந்நெற் பயிர்கள் நன்கு வளர்வதற்குச் செயற்கை உரங்கள் எதையும் பயன்படுத்தாதிருந்தனர். ஆனால் இன்றைய வேளாண்மையில் செயற்கை உரங்களில்லாமல் எந்த ஒரு பயிரும் வளர வாய்ப்பில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**நெற் அறுவடைப்பணி**

ஏமாங்கத நாட்டு உழவர்கள் தம் நிலத்தில் விளைந்த நெற்பயிர் அறுவடைப்பருவம் வந்தமையை அறிந்து அதற்கான பணியில் ஆயத்தமாவர். இரும்பால் உருவாக்கிய தேய் பிறை போன்று வளைந்த அரிவாளால் நெற்கதிர்களை அறுத்தனர். சோர்வு என்பதை அறியாத அவ்வுழவர்கள் நெற்கதிர்களை மலைபோல் குவித்து அரிவாளை மறு கைக்கு மாற்றினர் என்பதை,

**"தேய்பிறை யிரும்புதம் வலக்கை சேர்த்தினா**
**ராய்செநெ லகன்றகா டரிகுற் றார்களே"10**

என்றும்

**"மலைபட வரிந்துகூன் குயங்கைம் மாற்றினார்"11**

என்கிறது சீவகசிந்தாமணி. இத்தகைய உழவர்கள் இல்லையேல் நெல் என்பதைக் காண முடியாது என உணரமுடிகிறது. இவ்விடத்தில் வள்ளுவர்,

**"உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்**
**விட்டேமென் பார்க்கு நிலை"12**

என்ற குறள் மூலம் உணர்த்தியிருப்பது நினைவுகூறத்தக்கதாகும்.

நெற்கதிர்கள் அறுவடை செய்யப்பட்டு கட்டுக்களாகக் கட்டப்படும். அக்கட்டுக்களைக் களத்திற்கு எடுத்துச் செல்ல வலிமையான இளைஞர்கள் நியமிக்கப்படுவர். அவ்விளைஞர்கள் அதிவிரைவகாகக் கட்டுக்களைச் சுமந்து செல்லும் போது கரையோரத்தில் வளர்ந்திருந்த கமுகு மரத்தின் பழங்கள் நெற்கதிர்கள் பட்டு சிதறும் என்ற காட்சியை,

**"வாளையி னினந்தலை யிரிய வண்டலர்**
**தாளுடை தாமரை கிழிய வண்சுமை**
**கோளுடை யிளையவர் குழாங்கொண் டேகலிற்**
**பாளைவாய்க் கமுகினம் பழங்கள் சிந்துமே"13**

சீவக சிந்தாமணி வெளிப்படுத்தியுள்ளது. இதன்மூலம் இளைஞர்கள் செய்யும் நெல் அறுவடைப் பணி மகத்தானது என அறிய முடிகிறது. உழவர்கள் தம் நிலத்தில் விளைந்த நெற்கதிர்களை இளைஞர்கள் மூலம் களத்திற்குக் கொண்டு வரச்செய்த பிறகு வைக்கோலைத் தனியாகவும், நெல்லைத் தனியாகவும் பிரித்து எடுப்பர்.

இதற்கு எருமைகளைப் பயன்படுத்தினர். நெற்கதிர்களை நன்கு உரப்பி வைக்கோலைக் களைந்து செந்நெல்லைக் காற்றில் தூற்றித் தூய்மையாக்கினர். அங்ஙனம் எடுக்கப்பட்ட நெல் பொன்மலை போல் குவிந்திருந்தன என்பதைச் சீவக சிந்தாமணி.

**“ஈடுசால் போரழித் தெருமைப் போர்த்தினான்**
**மாடுறத் தெழித்துவை களைந்து காலுறீஇச்**
**சேடுறக் கூப்பிய செந்நெற் குப்பைகள்**
**கோடுயர் கொழும்பொனின் குன்ற மொத்தவே”14**

என்கிறது. இன்றைய வேளாண்மையில் இயந்திரங்களை நம்பியே வேளாளர்கள் செயல்பட வேண்டியுள்ளது. கிசான் கிராப்.ஃ.ப்ட் என்ற நெல் இயந்திரம் நெல்லை அறுவடை செய்து பயிர்களைச் செங்குத்தாக அனுப்பி நெல்லினை ஒரே சீராகத் தரையில் குவித்துச் செம்மையாக்குகிறது. பணம் இருந்தால் பத்தும் செய்யும் என்பதற்கேற்ப இன்றைய வேளாண்மையில் இயந்திரத்தால் நெல் அறுவடைப் பணி விரைவாகச் செயல்படுத்தப்படுகிறது என்பதைக் காண முடிகிறது.

**உழவர்களின் கொடைப்பண்பு**

உழவர்கள் தம் நிலத்தைக் கோவிலாகக் கருதி உழைத்தனர். அந்நிலத்திலிருந்து கிடைக்கப்பெற்ற நெல்லினைப் பிறருக்குக் கொடையாகத் தரும் வள்ளல்களாக உழவர்கள் இருந்தனர். கிணைப்பொருநர்களின் வறுமைத்துயரை நீக்குபவர்கள் உழவர்கள் என்பதை,

**“கிணைநிலைப் பொருநர்தம் செல்லல் கீழ்பட”15**

என்கிறார் திருத்தக்க தேவர். இதன் மூலம் யாரிடமும் எதையும் எதிர்பார்க்காத கொடை வள்ளல்களான ஏமாங்கத நாட்டு வேளார்கள் இருந்துள்ளமையை அறிய முடிகிறது.

**உழவர்களின் வணிகச் சிந்தனை**

ஏமாங்கத நாட்டு உழவர்கள் தம் நிலத்தில் விளைந்த நெல்லினை வறுமையில் வாழும் மக்களுக்கு முதலில் கொடுத்து மனம் மகிழ்வர். அதன்பிறகு விற்பதற்கான நெல்லினைத் தம் பண்ணையிலிருந்து தாமே கொண்டு செல்ல ஆயத்தமாவர். அதற்கு வண்டிபூட்டிச் செல்வர் என்பதை,

**“பணைநிலை யாய்செநெற் பகரும் பண்டியும்” 16**

என்று உழவர்களின் வணிகச் சிறப்பை வெளிப்படுத்தியுள்ளது சீவகசிந்தாமணி. இதன் மூலம் வேளாளர்களே வணிகர்களாகவும் செயல்பட்டுள்ளனர் என அறிய முடிகிறது,

**முடிவுரை**

நான்கு வகையான வருணத்தாரில் வேளார்கள் மிகச் சிறந்தவர்களாக வாழ்ந்துள்ளனர் என்பதைப் பல்வேறு இலக்கியங்கள் பறைசாற்றியுள்ளன. அவ்விதத்தில் சீவக சிந்தாமணி காப்பியமும் வேளாளர்களின் தொழில் மரபுகளை வெளிப்படுத்தியுள்ளது. வேளாளர்கள் நிலமகளைத் தொழுது நிலத்தை உழுது, மனம்மகிழ ஆரவாரம் செய்து, விதைகளை விதைத்து, பயிர்களை நட்டு, நன்கு முற்றிய நெற்கதிரை அறுவடை செய்து, கதிர்களை உதிர்த்து, பிறருக்குக் கொடை செய்து, வணிகத்தை வளமாக்கி வாழ்ந்தனர் என்பதையும். ஓய்வின்றி உழைக்கும் உழவர்களின் சிறப்பினையும், அறிய முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. சீவக சிந்தாமணி பா-31, பக்-10
2. தொல்காப்பியம் அகம் நூ-950
3. தொல்காப்பியம்–மரபியல் –நூ-1581
4. சீவச சிந்தாமணி பா-44, பக்-13
5. மேலது (பா-45, பக்14)
6. மேலது பா-44, பக்-13
7. மேலது பா-49, வரி -1-2, பக்-15
8. மேலது பா-51, வரி -1-2, பக்-15
9. மேலது பா-53, பக்-16
10. மேலது பா-55, பக்-16
11. மேலது பா-56, பக்-16
12. திருக்குறள்-1036
13. சீவச சிந்தாமணி பா-57, பக்-17
14. மேலது பா-59, பக்-17
15. மேலது பா-61, வரி-1, பக்-17
16. மேலது பா-61, வரி-2, பக்-17